**வசயைட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை - 2020**

-----------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

-------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்படும் ஆயுட்காலம் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், பயன்தரு ஆயுட்காலம் முன்னைய மதிப்பீட்டை விட மாற்றம் அடையும் எனின், இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 8) இன் படி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஜனவரி 01 திகதி அளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த ஆனால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 239,502,566 தொகை கிரயத்திற்கான ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பயன்தரும் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து அதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு 2015 ஆண்டின் போது நடவடிக்கை எடுத்த போதிலும் அது சரியான முறையில் நடாத்தப்பட்டிருக்காமையால், அந்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகள் கணக்குகளுக்கு எடுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளின் படி சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன்படி கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதிகளிடையே ரூபா 8,635,868 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், இணக்கஞ் செய்து கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பழுதடைந்த பொருட்கள மற்றும் ஏனைய கொள்வனவுகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 64,219,945 தொகையான | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இந்த மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் | பெறவேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | முற்கொடுப்பனவு முற்பணத் தொகையில் 2009 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை அறவீடு செய்ய முடியாமல் ரூபா 16,880,725 இற்கான தொகை ஒன்று காணப்பட்டது. இவற்றில் பழுதடைந்த பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 28,192,542 தொகைக்கான முற்கொடுப்பனவு தொகையில் 2009 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை அறவீடு செய்ய முடியாமல் காணப்பட்ட ரூபா 6,474,386 இற்கான தொகையும் காணப்பட்டது. | எடுக்கப்படவுள்ளன. | வேண்டும். |
| (ஆ) | இரண்டு வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 18,578,830 இற்கான வியாபார கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகளை தீர்ப்பதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 22,568,529 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை விடுவிக்கும் போது தடுத்து வைக்கப்பட்ட பணம் அந்த வழங்கு நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையின் படி இந்த தடுத்து வைத்தல் பணம் விடுவிக்கப்படுகின்றது. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2013 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை | i. அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத உத்தியோகத்தர் ஒருவர் | விசாரணை சபையினால் முறையான விசாரணை ஒன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2021.10.06 திகதிய கடிதத்தின் மூலம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை பணிப்பாளர் பதவிக்கு சேர்க்கப்பட்டு 2015 ஜூன் 26 ஆந் திகதி முதல் 2020 திசெம்பர் 31 வரை ரூபா 9,229,428 தொகை சம்பளங்கள் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | விற்பனை பணிப்பாளரின் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | |
| ii. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத போதும் பிரதிப் பணிப்பாளர் (வினைத்திட்ட அபிவிருத்தி) என கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் பணிப்பாளர் (கைத்தொழில் பேட்டை) பதவிக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத போதும் 2013 ஜனவரி 01 திகதி முதல் சேர்க்கப்பட்டிருந்தது. அந்த நாள் முதல் 2020 செப்தெம்பர் வரை இரண்டு பதவிகளின் சம்பளம் மற்றும் படி இடையே உள்ள வித்தியாசம் மொத்தமாக ரூபா 3,977,595 தொகையாக இருந்தது. | இது தொடர்பாக முறையான உள்ளக விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்த உத்தியோகத்தர் சபையின் சேவையில் இருந்து கேட்டு விளகியுள்ளார். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,022,747 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,828,307 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 21,851,054 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ்வளர்ச்சிக்கு விற்பனை வருமானம் அதிகரித்தல் மற்றும் விற்பனைக் கிரயம் குறைதல் முக்கிய காரணமாகியிருந்தது.

**2.2 மூலதன வருமானம் மற்றும் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு**

| | 2020 (ரூபா) | 2019 (ரூபா) | வித்தியாசம் (ரூபா) | % |
|---|---|---|---|---|
| வருமானம் (பழுதடைந்த) | 24,576,340 | 241,885,519 | 5,690,821 | 2.4 |
| <u>விற்பனைக் கிரயம்</u> | | | | 6.6 |
| நேர்கூலி | 4,178,580 | 8,287,193 | 4,108,613 | |
| மறைமுகப் மூலப்பொருள் | 483,643 | 4,764,080 | 4,280,437 | |
| பழுதடைந்த செயற்திட்ட விற்பனைக் கிரயம் | 165,876,436 | 174,649,110 | 8,772,674 | |

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பழுதடைந்த பொருட்களின் மொத்த வருமானம் 2.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் விற்பனைக் கிரயம் 6.6 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

**2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு**

| விகிதாசாரம் | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதாசாரம் | 1:1.3 | 1:1.3 |
| மொத்தலாப விகிதாசாரம் | 38.39 | 31 |
| தேறியலாப விகிதாசாரம் | 3.52 | (2) |

தேறிய இலாப விகிதாசாரம் அதிகரிப்பிற்கு ஆண்டின் விற்பனை வருமானம் அதிகரித்தல் விற்பனைக் கிரயம் குறைவடைதல் காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு மற்றும் மத்திய அளவிலான உணவு ஆய்வுகூட பரிசோதனை சேவைகள் வழங்குவதன் மூலம் தொழில் மேம்படுத்துகை மற்றும் அபிவிருத்தி போலவே உணவு உற்பத்திகளில் தரம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு உயர்த்துதல் ஆகிய குறிக்கோளினை முதலாக கொண்டு உணவு ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் மாதம் முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் உணவு | ஆய்வுகூடம் ஒன்றில் பரிசோதனை மேற்கொள்ளும் இயலுமையின் மீது ஆய்வு கூடத்தின் மூலம் சிறந்த சேவை ஒன்றை வழங்குவதற்காக உப ஒப்பந்த முறைமை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்ததுடன், இலங்கையில் மேற்கொள்ளப்படாத அளவுருக்கள் சேவை நாடுனர் ஒருவரினால் வினவிய போது வேறொரு | நிறுவனத்திற்கு வருமானம் உச்சமட்டமாக கிடைக்கக் கூடிய விதமான உடன்படிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆய்வுகூடத்திற்கு கிடைத்திருந்த 246 பரிசோதனை அறிக்கைகள் இலிருந்து ரூபா 2,380,630 தொகை உழைத்திருந்த போதிலும இந்த ஆய்வுகூடம் தானாக இயங்காமல் வெளி நிறுவனம் ஒன்றுடன் தொடர்புபட்டு செயற்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நடாத்தப்பட்ட பரிசோதனை வருமானத்தில் 80 சதவீதம் வெளிநிறுவனத்திற்கு செலுத்த நேரிட்டிருந்தது. | நாட்டில் இருந்தேனும் உப ஒப்பந்த அடிப்படையில் சேவையை வழங்குதல் பொருத்தமானதாகும். உப ஒப்பந்த முறையை கடைபிடிப்பதன் மூலம் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி சபைக்கு ஏனைய பரிசோதனைகள் போலவே வருமானம் பகிரப்படுவதனால் வருமானம் வித்தியாசப்படுவதில்லை. | |
| (ஆ) | தொழில் முயற்சியாளர் நிலை கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தின் வன்கானை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பன்சல்கொடை கிரமாத்திற்கு விநியோகிப்பதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 5,556,411 தொகை பெறுமதியான பண்டங்கள் 2021 ஜுலை மாதம் இறுதி வரை நலன்பேருவோருக்கு பகிரப்படாமல் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மாவட்ட அலுவலகத்தின் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டது. | கிராமங்களுக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்காக உரிய மாவட்ட பிரதிப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. | கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் தாமதம் இன்றி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |
| (இ) | சிறு மற்றும் மத்திய அளவான கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் தரத்தை முன்னேறுதல், விரயங்களை குறைத்தல், உற்பத்தி செய்முறையை வினைதிறனாக்கல் மற்றும் உற்பத்திக் கிரயத்தினை குறைத்தல் குறிக்கோளுடன் 2016 ஆண்டின் போது ரூபா 9,318,026 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த இறப்பர் இன்ஜெக்ஷன் மோல்டின் இயந்திரத்தின் மூலம் 2020 பெப்ரவரி வரை 28 கைத்தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கல் மற்றும் தொழிற்நுட்ப ஆலோசனை வழங்கி ரூபா 63,000 இற்கான வருமானம் ஒன்று மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | ➢ இந்த இயந்திரத்தை பயன்படுத்தி இதுவரை 250 – 300 இடைப்பட்ட கைத்தொழிலாளர்களை அறிவுறுத்தி வெளிநாட்டுச் சந்தைக்கு மற்றும் இறக்குமதிப் பண்டங்களின் நியமங்களுக்கு ஏற்ப உள்நாட்டில் உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செய்முறை பயிற்றுவித்தல் வழங்கப்பட்ட போதிலும் அவர்களின் ஈடுபாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.<br>➢ மோட்டார் வாகன உதிரிப் | நிறுவனத்தின் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதேபோல், இந்த இயந்திரம் உற்பத்தித் தன்மையுடைய இயந்திரம் ஒன்றாக காணப்பட்ட போதிலும் கொள்வனவு செய்திருந்த நாள் முதல் பயிற்சி வழங்கல் தவிர ஏனைய உற்பத்திக் கருமங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2020 பெப்ரவரி 21 இன் பின்னர் இந்த இயந்திரத்தை செயற்படுத்தாமல் இருந்த காரணத்தினால் கணக்காய்வுத் திகதியாகிய 2021 ஜூலை 30 திகதி வரை அது செயற்படாத நிலைமையை அடைந்திருந்தது. உச்ச கொள்திறனை உடைய இந்த இயந்திரம் உற்பத்தி விடயங்களுக்காக பங்களிப்பு பெற்றுக்கொள்வதற்கு தேவையான வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படாமையால் சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்திருந்தது. | பாகங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இறக்குமதி செய்யும் பண்டங்கள் அந்தத் தரத்தில் இங்கு உற்பத்தி செய்தல் தொடர்பாக ‘‘நியம செய்முறை – sop ‘‘ செயற்படுத்துவதற்கு தொடர் நிகழ்ச்சியாக பண்ட உற்பத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைையொப்பமிடுவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது.<br>➢ தற்போது இயந்திரத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அமைந்துள்ள 1.2953 ஹெக்டயர் அளவான காணி மற்றும் பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள 13 ஏக்கர் 03 ரூட் 34 பர்சஸ் அளவான காணிகளின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு முடியாதிருந்தது. இந்த ஆதனங்களுக்கு பாரிய வாணிப பெறுமதி காணப்பட்ட போதிலும் பெறுமதியினை கணித்து சபையின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு இதுவரை முடியாதுள்ளது. பிரதான அலுவலகம் அமைந்துள்ள வளவில் ‘‘நவபிம’’ கட்டடம் அமைந்துள்ள காணியின் ¾ பங்கில் தனியார் வியாபாரங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன் அவர்களிடம் தரை வாடகை ஏதும் அல்லது கட்டட வாடகை ஒன்று அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் ஆரம்ப உரிமையாளரை கண்டறிய முடியாமையால் குறிப்பிட்ட காணியை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கல்களுக்கான அலுவல்கள் முறைப்பிரகாரம் மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது. நவபிம காணியை சபைக்கு உரித்தாக்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் இருந்த போதிலும் குறிப்பிட்ட காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு மொரட்டுவ பிரதேச செயலாளரினால் இதுவரை உரித்தாக்கியிருக்காமையால் காணப்படும் வியாபார நிலையங்களில் இருந்து வாடகை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 18 கைத்தொழில் பேட்டைகளில் 761 காணிப் பகுதிகள் காணப்படுவதுடன், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 90 காணிப் பகுதிகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிரப்பட்டிருக்காமையால் அக்காணிப் பகுதிகள் விளைவற்றுக் காணப்பட்டது. அதேபோல் 14 பேட்டைகளின் 47 காணிப் பகுதிகள் கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டிருந்தது. மேலும் 03 பேட்டைகளில் கைதொழிலுக்காக வழங்கியிருந்த 43 காணிப் பகுதிகளில் 11 காணிப்பகுதிகள் வதிவதற்காக பயன்படுத்தப்பட்டன. | வெற்றுக் காணிப்பகுதிகளை சாட்டுவதற்காக புதிய முதலீட்டாளர்கள் அறிவுறுத்தப்பட்டு வருவதுடன் செயற்படாத கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அல்லது புதிய முதலீட்டாளர்களுக்கு சாட்டுவதற்காக தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக கணிப்பீடொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 1990 காலப்பகுதியில் காணிப்பகுதிகள் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் ஆரம்பிக்காமல் வதிவதற்காக பயன்படுத்தியிருந்தனர். | காணிப் பகுதிகளை கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு மற்றும் ஆக்கபூர்வமான கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அமப/16/1424/723/039 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ரோபோ தொழில்நுட்பத்திற்கான விசேடத்துவ நிலையம் ஆரம்பிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை கட்டடம் ஒன்றை நவீனமயப்படுத்துவற்கும் சுமார் ரூபா 40 மில்லியன் செலவிடப்பட்டு சுமார் ரூபா 80 மில்லியன் பெறுமதியான 04 ரோபோ இயந்திரங்கள், சீஎன்சீ லேத் மற்றும் மில் இயந்திரங்கள் 02 உட்பட அதனொடு தொடர்புடைய உபகரணங்கள் கொள்வனவு செய்து சீஎன்சீ லேத் மற்றும் 02 மில் இயந்திரங்கள் தவிர ஏனைய உபகரணங்கள் 2018 மார்ச் அளவில் அங்கு பொருத்தப்பட்டிருந்தது. இதனை செயற்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தம்பர் முதல் 2018 அக்தோபர் வரை காலப்பகுதிக்காக மாதாந்தம் ரூபா 725,000 வீதம் சம்பளம் மற்றும் படியாக கூட்டுத்தொகை சுமார் ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கம்பனி ஒன்றாக பதிவு செய்யப்பட்டு தேவையான பதவியணியினரை சேர்ப்பதற்கு மற்றும் அவ்விடயங்களை ஆரம்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த தோல்வியின் காரணமாக கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் இந்த நிலையம் 2018 திசெம்பர் 28 திகதிய | ரோபோ இயந்திரங்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் 2020 நவம்பர் 16 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி அகற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை எதுவும் நடைபெற்றிருக்காததுடன் கூடிய விரைவில் அந்த உபகரணங்களை அகற்றி வளவினை விடுவிக்கும் படி அமைச்சுச் செயலாளரை மீண்டும் கோரப்பட்டது எனவும் கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். அனைத்துச் செயற்பாடுகளும் வரிசை அமைச்சின் அறிவுரைகள் மற்றும் கட்டளைகளின் படி மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | பொது இணக்கத்துடன் மீண்டும் செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பித்து சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2013/2014 கொண்ட வர்த்தமானியின் மூலம் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2020 ஆகஸ்ட் முதல் கைத்தொழில் அமைச்சிற்கு சாட்டப்பட்டிருந்தது. நிலைமை அவ்வாறிருக்கும் போது 2020 நவம்பர் 16 திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் 20/1725/320/025 படி இந்த நிலையத்தில் காணப்பட்ட கொழும்பு 10, ட்ரஸ் சிடிக்கு எடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு செய்திருந்த நாள் முதல் இந்த ரோபோ இயந்திரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2021 ஆகஸ்ட் 30 திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமையால் உள்ளக துருப்பிடித்தலுக்கு இலக்காகியுள்ளது எனவும் சில மென்பொருட்களுக்கான இரகசிய குறியீடுகள் உட்படுத்தப்பட்டிருந்தமையால் இயக்குவதற்கு முடியாமல் காணப்பட்டது என வெளிப்படுத்தப்பட்டது. இலங்கையில் கைத்தொழில்களை வலுவூட்டல் அவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்திக்கு உதவுதல் ஆகிய குறிக்கோளுடன் இந்த ரோபோ தொழிநுட்பத்திக்கான விஷேடத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2019 ஆகஸ்ட் 02 திகதி இந்த ரொபோ தொழிநுட்ப நிலையத்திற்கு கொள்வனவு செய்திருந்த ரூபா 35,788,924 தொகை பெறுமதியான சீஎன்சீ லேத் மற்றும் 5 axis மிலின் இயந்திரம் (CNC Lathe & Milling Machine) இரண்டும், நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள “நவபிம” கட்டிடத்திற்கு வெளியே கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொறியியல் பிரிவின் கட்டிடத்தில் நிறுவப்பட்டிருந்தது. அதன் விவரக் குறிப்புக்களை மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பத்தில் 5 axis மிலின்

லேத் மற்றும் மிலின் இயந்திரங்கள் தற்போது ஆக்கத்திறனுள்ள செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதற்காக பொறியியலாளர் ஒருவர் வேலை சாட்டுதல்களின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், தேவையான பயிற்சிகள் வழங்குவதற்கும் அதன்மூலம் வேலைக் கட்டளைகள் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நீண்டு காலமாக வெற்றிடமாக காணப்படும்

சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரத்தின் மூலம் சிக்கல்கள் கருமங்கள் வடிவமைத்து செயற்படுத்துவதற்காக விஷேடத்துவ பொறியியலாளர் ஒருவர் இதற்காக தேவைப்படுகின்றது எனவும் அவ்வாறு காணப்படாவிடின் குறிப்பிட்ட இயந்திரம் விளைவற்று அல்லது குறைபயன்பாடு ஏற்படும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வரை குறிப்பிட்ட விடயத்திற்காக பொறியியலாளர் ஒருவர் சேர்க்கப்பட்டிருக்காததுடன் 5 axis பயன்படுத்துவதற்கான பயிற்சியும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட ஊழியர் தொகையில் பாதியளவை விட மிகையான தேர்ச்சி பெற்ற பொறியியலாளர் ஊழியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு முன்மொழிகின்றோம். | |
| (உ) | இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் பழுதடைந்த உலோக முகாமைத்துவம் தொடர்பாக 2013 தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பழுதடைந்த உலோகங்களை சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான அடிப்படையின் கீழ் விநியோகித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2020 ஆண்டின் போது கைத்தொழிலாளர்களுக்கு விற்பனை செய்திருந்த பெறுமதி ரூபா 43,382,731 இற்கான பழுதடைந்த டிரான்ஸ்போமர்களில் 52 சதவீதம் அதாவது ரூபா 22,453,167 தொகை டிரான்ஸ்போமர் விண்ணப்பிக்கப்படாத அல்லது பரிந்துரைக்கப்படாத கைத்தொழிலாளர் மூவருக்கும், 48 சதவீதம் அதாவது ரூபா 20,929,564 தொகை ஒன்பது கைத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் கொள்வனவு செய்திருந்த டிரான்ஸ்போமர் ஒயில் 40,150 லீற்றர் தொகையில் 37 சதவீதம் ஆகிய 15,000 லீற்றர்கள் சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிலாளர் அல்லாத நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.<br>அதேபோல் 06 வகையான பழுதடைந்த இரும்பு 1,062,816 கிலோகிராம் விற்பனை செய்திருந்த போதிலும் அவற்றிற்காக விண்ணப்பித்திருந்த கைத்தொழிலாளர்கள் 61 பேரில் | சில சந்தர்ப்பங்களில் நிறுவனங்களுக்கு மூலப்பொருட்கள் வழங்கப்படும் போது அந்த பிரதான மூலப்பொருளுடன் மேலும் சிறு தொகையான மூலப்பொருட்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த சிறு அளவிலான மூலப் பொருட்களை கட்டாயமாக அகற்றப்பட வேண்டிய காரணத்தினால் ஏனைய பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு போக்குவரத்து கட்டணம் செலுத்தி மிகவும் சிறிய எண்ணிக்கை வழங்குவது முடியாமையால் அந்த சிறிய மூலப்பொருள் எண்ணிக்கையை பிரதான பிரதான மூலப்பொருள் பெற்றுக்கொள்ளும் கைத்தொழிலாளருக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக குறிப்பிட்ட மூலப்பொருள் கைத்தொழிலாளருக்கு கிடைக்கப் பெறாமல் இருக்க இடமிருக்கின்றது. | சிறு மற்றும் மத்திய அளவான கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக பழுதடைந்த உலோகங்களை நியாயமான அடிப்படையில் விநியோகிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,455,000 கிலோகிராம் விண்ணப்பித்திருந்த கைத்தொழிலாளர்கள் 14 பேருக்கு எதுவும் கிடைத்திருக்காததுடன், அவ்விடயத்திற்காக விண்ணப்பித்திருக்காத 21 கைத்தொழிலாளர்களுக்கு 35,755 கிலோகிராம் வழங்கப்பட்டிருந்தது. Furnace Oil 14,970 லீற்றர்கள் விற்பனை செய்திருந்த போதிலும் அவற்றிற்காக விண்ணப்பித்திருந்த 40 கைத்தொழிலாளர்களில் 12 பேருக்கு மாத்திரம் அந்த பழுதடைந்த பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், மொத்த பழுதடைந்த உலோக பதிவுசெய்திருந்த 296 கைத்தொழிலாளர்களில் 44 பேருக்கு பழுதடைந்த விடயங்கள் ஏதும் கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | மூங்கிள் மரத்தை பயன்படுத்தி கிரயத்தை ஆக்கபூர்வமாகவும் போதியளவு எண்ணிக்கையான சந்தைக்கு தகுதியான பண்புசார் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் வருமானம், தொழில் வாய்ப்பு மற்றும் ஜீவனோபாயத்திற்கு ஆக்கபூர்வமாக தாக்கத்தை ஏற்படுத்தும் அடிப்படை குறிக்கோளுடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் யுனிடோ நிறுவனம் ஒன்றினைந்து மூங்கிள் மரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆண்டின் போது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை வளவில் இந்த செயற்திட்டம் தொடர்பாக யுனிடோ நிறுவனத்தினால் வழங்கியிருந்த ரூபா 7,438,682 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு 42 நாட்கள் 18 நலன்பெறுவோருக்கு 5 செயலமர்வுகள் நடாத்தி தெரிவு செய்யப்பட்ட 11 நலன்பெறுவோருக்கு மூங்கிள் மரம்கள் மூலம் விசித்திரப் பண்டங்கள், நினைவுப் பொருட்கள் ஆக்குவதற்காக ரூபா 2,349,199 தொகை பெறுமதியான உபகரணத் தொகுதிகள் 2020 ஜூலை மாதம் பகிரப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோளை | நலன்பெறுவோருக்கு வழங்கப்பட வேண்டியிருந்த உபகரணங்கள் தொடர்பாக UNIDO நிறுவனத்தின் உத்தியோகத்தரினாலேயே பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.<br>மூங்கிள் மரம் கொள்வனவு செய்தல் போக்குவரத்து மற்றும் சந்தை<br>மூங்கிள் மரம் வெட்டுதல் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டச் செயற்பாடு காரணமாக தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியீனங்கள் மற்றும் தாமதங்கள் ஏற்படுகின்றமையால் சபையினால் வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் கலந்துரையாடி மூங்கிள் மரம் வெட்டுதல் போக்குவரத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது விரைவாக மற்றும் முக்கியத்துவத்துடன் அவற்றை வழங்குமாறு அனைத்து மாவட்ட வன உத்தியோகத்தர்களுக்கும் இலக்கம் H3/10/04/2020 மற்றும் 22/12/2020 திகதி கொண்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.<br>இராட்சத மூங்கிள் விஷேடத்துவமானவை | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிறைவேற்றுவதற்காக மூங்கிள் மரம்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் மற்றும் மூங்கிள் மரம் போக்குவரத்திற்கு கூடிய கிரயம் ஒன்று மேற்கொள்வதற்கு நேரிடல், வழங்கியிருந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு முடியாமை, ஆகிய காரணங்களினால் கிரயத்தை பயன்தரு தரமான பண்டங்கள் உற்பத்தி செய்தல் நலன் பெறுவோருக்கு கடினமான கருமம் ஒன்றாக காணப்பட்டமையால் அவர்களின் வருமானம் அதிகரித்தல் அல்லது ஜீவனோபாயம் ஆக்கபூர்வமான தாக்கம் ஒன்றை ஏற்படுத்துதல் தவறிவிடப்பட்டுள்ளது. அதேபோல் இந்த செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட 320 பேரின் ஜீவனோபாயத்திற்கான மூலப்பொருள் வழங்கும் 60 பேருக்கும் நேரிடியாக நலன்கள் வழங்குவதற்கு எதிர்பாரத்த போதிலும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

மூங்கிள் மரம்கள் மூலம் பண்டங்கள் உற்பத்தி செய்யும் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவுதல் இந்தச் செயற்திட்டத்தின் இரண்டாவது குறிக்கோளாக காணப்பட்டதுடன், அதற்காக லக்சல தச்சுத்தொழில் நிலையம் அமைந்துள்ள கட்டடம் ஒன்று ரூபா 273,360 இற்கான செலவொன்று மேற்கொண்டு திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு யுனிடோ நிறுவனத்தினால் வழங்கியிருந்த 101,130 அமெரிக்கா டொலர் பெறுமதியுடைய இயந்திர உபகரணங்கள் 2020 மே 28 திகதி அந்தக் கட்டடத்தில் நிறுவப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2021 ஜுன் 30 திகதி வரை மூங்கிள் மரங்கள் சார்ந்த உற்பத்திக்காக பயற்சி வழங்கல் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் அந்த இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

அனேகமானவை மத்திய மாகாணத்தில் இருந்து பரிசோதனைக்காக அந்த வகையினை கண்டிப் பகுதியில் இருந்து எடுத்து வரும் போது போக்குவரத்துக் கட்டணம் மிகையாக காணப்பட்ட போதும் பிரதேச மட்டத்தில் கைத்தொழிலாளர்களுக்கு இந்த செலவு குறைவாக இருந்தது. பயிற்சி பெற்றோர் உற்பத்தி செய்யும் கைப்பணிப் பொருட்களுக்காக முக்கிய சந்தை சுற்றுலா தொழிலிலே தங்கியிருந்தது. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் சுற்றுலா கைத்தொழில் முற்றாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் இந்தச் சந்தை சுற்றுலாத்துறை பழைய நிலைமைக்கு வந்த பின்னர் தீர்க்கப்படும்.
நிலையம் 2020.12.21 திகதி திறக்கப்பட்ட போதும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போதும் பரவியிருந்த கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மீது நாட்டில் கலந்துரையாடல்கள், மாநாடுகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் தொற்றுநோய் நிலைமையில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருந்தது. தொற்றுநோய் நிலைமை முடிவடைந்த பின்னர் செயற்திட்டத்திற்கு உரிய இலக்கை நோக்கி வசதியாக செல்வதற்கு முடியுமாக இருக்கும்.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உணவு ஆய்வுகூடத்தின் முதலாவது மாடியில் அமைந்துள்ள நுண் உயிரியல் ஆய்வுகூடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யும் போது நிறுவுவதற்கு பொருத்தமான உபகரணங்கள் கொள்வனவு செய்தவற்கு திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த உபகரணங்கள் 2019 ஆண்டில் கொள்வனவு செய்திருந்ததுடன், ரூபா 6,203,670 தொகை பெறுமதியான உபகரணங்கள் 2021 ஜூலை இறுதியளவில் உரைகளுடன் விளைவற்று தரை மாடியில் வைக்கப்பட்டு காணப்பட்டது. | இவ் ஆண்டு திசெம்பர் மாதம் அளவில் உபகரணங்கள் அனைத்தும் நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ‘‘நங்வமு லங்கா’’ தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிலின்மை மற்றும் வறுமை போன்ற பொருத்தமான தேர்வு முறைகளின் அடிப்படையில் நாட்டில் அனைத்து மாவட்டங்களும் அடங்கக்கூடியவாறு நலன் பெறுவோர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தி அவர்களின் தொழில்களுக்கு தேவையான பண்டங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மாவட்ட செயலகத்தினால் கொள்வனவு செய்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளருக்கு ஒப்படைத்த பின்னர் பிரதிப் பணிப்பாளர் இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் சேர்ந்து அந்தப் பண்டங்களை நலன்பெறுவோருக்கு விநியோகிக்க வேண்டியிருந்தது. அதன்படி 2019 இறுதியில் மற்றும் 2020 மார்ச் மாதத்திற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த ரூபா | மூன்று மாவட்டங்களில் மாத்திரம் குறிப்பிட்ட பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் மற்றும் நலன் பெறுவோரை தெரிவு செய்யும் போது காணப்பட்ட தெளிவற்ற நிலைமைகளின் காரணமாக மிகவும் நியாயமான அடிப்படையில் முழு நாடும் அடங்கக் கூடிய விதமாக மிகவும் தகைமையுடைய நலன் பெறுவோருக்கு வழங்கும் குறிக்கோளுடன் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் கருவிகள் தலைமை அலுவலகக் களஞ்சியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீண்டும் தகைமை உடைய நலன் பெறுவோருக்கு விநியோகிப்பதற்காக அமைச்சரவை பத்திர | நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற்காக மற்றும் சொத்துக்களை நலன் பெறுவோருக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தக் கூடியவாறு பண்டங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 55.8 மில்லியன் பெறுமதியான பண்டங்கள் பதுளை, மாத்தளை மற்றும் கண்டி மாவட்ட நலன் பெறுவோருக்கு விநியோகிப்பதற்காக 2020 ஆகஸ்ட் 18 திகதிய உள்ளகக் குறிப்புப் பத்திரம் ஒன்றின் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதான அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிருவாக, பயிற்சி மற்றும் ஏனைய செலவுகள் என ரூபா 16,772,403 தொகை மேற்கொள்ளப்பட்டு நாடு பூராகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்தப் பண்டங்கள் நலன்பெறுவோருக்கு விநியோகிக்கப்படாமல் அவற்றின் உத்தரவாத காலத்தையும் மிகைத்து பல களஞ்சியங்களில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | இலக்கம் 21/0577/320/017 இன் படி குறிப்பிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் "கைத்தொழில் போசணையின் மூலம் பொருளாதாரத்தை வழுப்படுத்துவதற்கான வீட்டு தொழில் முயற்சியாளர் சக்தி" என்ற செயற்திட்டத்தின் கீழ் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நாட்டில் தகைமை உடைய தொழில் முயற்சியாளர்களுக்கு பகர்ந்தளிப்பதற்காக தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற எதிரகால நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | பேலியகொட இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 64 இறப்பர் சார்ந்த இயந்திர உபகரணங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 24 இயந்திரங்கள் 1 வருடம் முதல் 36 வருடங்கள் வரையான காலவீச்சு முதல் செயற்படாமல் காணப்பட்டது எனவும், ஒரு இயந்திரம் கொள்வனவு செய்த திகதி முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என கண்டறியப்பட்டது. | இறப்பர் பிரிவில் காணப்படும் அனேமான இயந்திரங்கள் பிரிவு அரம்பிக்கப்பட்ட காலத்தில் பொருத்தப்பட்ட இயந்திரங்களாகும். அந்த இயந்திரங்களின் திருத்த வேலை மேற்கொள்வற்கு தேவையான உதிரிப் பாகங்கள் தற்போது சந்தையில் காணப்படாமையால் திருத்த வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இயந்திரங்களின் திருத்த வேலைக்காக பயன்படுத்தப்படும் பணத்தின் படி புதிய தொழில்நுட்பத்தை உடைய இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் பொருத்தமானதாக காணப்பட்டதுடன், | அத்தியவசியமான உபகரணங்கள் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவ்வாறான இயந்திரங்களுக்கு நேரொத்த இயந்திர மூலதன பண்டங்கள் கொள்வனவு செய்வதனூடாக மற்றும் வெளி நிதியங்களின் மூலம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பஹா மாவட்ட அலுவலகம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலை ரூபா 38,139,000 இற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு 2017 திசெம்பர் 19 திகதி கட்டடத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் கட்டட திணைக்களத்தினால் தனியார் ஒப்பந்த வேலை நிறுவனம் ஒன்றிற்கு 301 நாட்களில் நிர்மாண வேலை பூர்த்தி செய்து தரும் படி ரூபா 26,379,710 இற்கான பெறுமதி கூட்டிய வரி இன்றி தொகைக்கு ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டு 2019 ஜனவரி 21 திகதி வரை தாமதாக இருந்தது. கட்டடத்தின் முதல் மாடியை மாத்திரம் நிர்மாணிப்பதற்காக சபையின் முகாமைத்துவம் எடுத்திருந்த தீர்மானத்தின் காரணமாக முற்பணமாக ரூபா 2,914,000 தொகை மற்றும் ரூபா 2,964,640 தொகை பில் பத்திரம் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2021 ஜூன் அளவில் டென்டர் ஒப்படைக்கப்பட்டு 04 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் இரண்டு மாடிக் கட்டடத்தின் பொருத்தமான அத்திவாரம் ஒன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2021 ஜூன் 26 திகதி மீண்டும் டென்டர் அழைக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 05 திகதி ரூபா 15,035,958 இற்கான (பெறுமதி கூட்டிய வரி இன்றி) தொகைக்கு வேறு தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு 186 நாட்களில் | தற்போது 2021 ஆண்டின் தரை மாடி நிர்மாணித்தல் தொடர்பான டென்டர் அழைக்கப்பட்டு கட்டடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கட்டடத் திணைக்களம் நிர்மாண வேலைக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வை அலுவல்களை மேற்கொள்ளப்படுகின்றது. | விரைவாக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

தரை மாடி நிர்மாண வேலைகளை செய்யுமாறு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், காணியின் சட்டரீதியான உரிமை சபைக்கு சொந்தமாக இருக்காத போதிலும் இந்த நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி தொழில் மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் பதவியொன்றாக காணப்பட்ட போதிலும் வழக்குத் தீர்ப்பொன்றின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் 55 பேருக்காக தொழில் மேம்படுத்தல் முகாமையாளர்கள் என மத்திய முகாமைத்துவ மட்டம் வழங்கியிருந்த போதிலும் இந்த உத்தியோகத்தர்களை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவதற்கான அங்கீகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 ஜூலை 30 திகதி வரை அந்த அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | தொழில் மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் 55 பேர் தொழில் மேம்படுத்தல் முகாமையாளர்கள் என மத்திய முகாமைத்துவ மட்டத்திற்கு நியமனம் செய்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் இருந்து அங்கீகாரத்தை எதிர்பார்த்த போதிலும் அவ்வாறு கிடைத்திருக்கவில்லை. அதன் படி அந்த உத்தியோகத்தர்களினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் CA(wrid) 122/2021 வழக்கொன்று தாக்கல் செய்திருந்ததுடன், அந்த வழக்கு தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றது. | பதவிகளை வழங்க முன்னர் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியினதும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினதும் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத டிஜிட்டல் ஊடக ஆலோசகர் ஒருவர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2020 செப்தம்பர் 21 திகதி முதல் 6 மாதங்களுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை பத்திரத்தின் படி சபையின் தோற்றத்தை கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்து செயற்படுத்துவதற்கும், சமூக ஊடகத்தில் சபையின் செயற்பாடுகளுக்காக விளம்பரம் | சபையினால் சிறு மற்றும் மத்திய அளவிலான கைத்தொழில் துறைக்கு மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பாக அரச மற்றும் தனியார் மற்றும் சமூக வலை பின்னல்களில் பிரசித்தப்படுத்துவதற்கும், இலங்கை கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக சந்தையின் சந்தர்ப்பங்களை விரிவாக்குதல் சபையின் வலைபின்னல் புதுமையான மற்றும் கவர்ச்சிகரமாக பேணிச் செல்வதற்காக சேர்க்கப்பட்டிருந்த டிஜிட்டல் ஊடக ஆலோசகர் ஆறு மாத | பதவிகளை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்று வழங்குவதற்கும், சபையின் உள்ளக உத்தியோகத்தர்களின் டிஜிட்டல் தொடர்பாடல் தொடர்பான அறிவினை நாளதுவரை ஆக்கல் மற்றும் அபிவிருத்தி செய்தலும் அவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் என காட்டப்பட்டிருந்தன. இதற்காக ரூபா 60,000 இற்கான கொடுப்பனவு ரூபா 50,000 போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் ரூபா 16,440 எரிபொருள் கொடுப்பனவு என மாதாந்தம் ரூபா 126,440 தொகையொன்று என 06 மாதங்களுக்காக ரூபா 758,640 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்கு வருதல் மற்றும் வெளிச்செல்லல் தொடர்பாக தகவல்கள் மற்றும் அவருக்கு சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த காலத்தின் பின்னர் சேவை பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு வெளியே உள்ளார். அவர் ஆலோசகர் ஒருவராக சேர்க்கப்பட்டதுடன் பதவியணி ஊழியர் போல் அவரின் நாளாந்த வரவு மற்றும் வெளிச் செல்லல் தொடர்பாக தகவல்கள் தேவைப்படவில்லை. | |
| (இ) | பதில் கடமை நியமனங்கள் நிரந்தர நியமனம் வழங்கும் வரை தற்காலிக செய்முறை ஒன்றாக மாத்திரம் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 8 உதவிப் பணிப்பாளர் உட்பட 12 உத்தியோகத்தர்கள் பதில் கடமை ஆற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் 8 உத்தியோகத்தர்களின் காலம் 02 வருடங்களை விட மிகைத்திருந்தது. | தற்போது பதில் கடமை உத்தியோகத்தர்கள் முழு நேர அடிப்படையில் அந்தப் பதவிகளுக்கு சேர்ப்பதற்காக 2018.08.13 மற்றும் 2019.03.18 திகதிகளை கொண்ட இரண்டு கடிதங்களின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதும் தேவையான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---------------------------------------------------

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

---------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | -------------------------------- | ----------------------------- |
| (அ) | சிறு மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் விற்பனை | கடந்த ஆண்டு முழுவதும் கொரோனா தொற்றுநோய் காணப்பட்டமையால் கண்காட்சி போன்ற | இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டுக்குரிய செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கை எடுத்தல், சேவைகளை மேம்படுத்துதல், எதிர்கால சந்தையுடன் தொடர்புபடுத்துவதற்கு உதவுதல் ஆகிய குறிக்கோளுடன் விற்பனை பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்ற பரிசோதனையின் போது 8 செயற்பாடுகளில் 4 மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்டிருந்த 4 செயற்பாடுகளில் கைத்தொழிலாளர்களுக்கு தேவையான பழுதடைந்த உலோக மூலப்பொருள் வழங்கும் முன்னேற்றம் 66 சதவீதமாக காணப்பட்ட போதிலும் ஏனைய 03 செயற்பாடுகளின் முன்னேற்றம் 6 சதவீதம் முதல் 20 சதவீதத்திற்கு இடைப்பட்டு காணப்பட்டது. பிரிவின் வருமானத்தில் 95 சதவீதம் பழுதடைந்த உலோக விற்பனையின் மூலம் பெற்றிருந்ததுடன், பிரிவின் ஏனைய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழிலாளர்களை ஒன்று சேர்க்கும் கருமங்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும், துணை ஒப்பந்த செயற்திட்டம் தொடர்பாக அரச நிறுவனங்களில் இருந்து உரிய முறையில் கட்டளைகள் கிடைத்திருக்கவில்லை. | |
| (ஆ) | சபையின் ஏனைய பிரிவுகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதும், கிராம மக்களின் தேவைக்காக தேவையான தொழில்நுட்பத்தை வழங்குவதும், தயாரித்தல் மற்றும் கைத்தொழிலுக்கான தர அறிக்கைகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தலும், உள்நாட்டு உலோக கைத்தொழிலுக்கான வார்ப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் பொறியியல் துறை நிருவப்பட்டிருந்த போதிலும் இந்த பிரிவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்பட்ட 14 கருமங்களில் அடங்கியிருந்த 5 கருமங்களின் முன்னேற்றம் 0 சதவீதமாக காணப்பட்டதுடன் ஏனைய கருமங்கள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம் 16 சதவீதம் முதல் 39 சதவீதம் வரை | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆண்டின் போது இயந்திர சேவைகளுக்காக கிடைத்திருந்த விண்ணப்பங்கள் குறைவாக இருத்தல், அத்தியவசிய சேவை தேர்வு முறை செயற்படுதல் மற்றும் தொற்றுநோய் தடைக்காப்பு நிலமைகள் வழங்கியிருந்த இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது என குறிப்பிடலாம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பரவியிருந்தது. | | |
| (இ) | இறப்பர் பொருட்கள் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல், இறப்பர் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கான வசதிகள் வழங்குதல், தரப் பரிசோதனை மற்றும் தரத்தினை பரிசோதனை செய்தல், இரசாயன பொருட்கள் வழங்குதல், இறப்பர் பால் கலவை மற்றும் செயற்கை மற்றும் இயற்கை இறப்பர் கலவைகளை வழங்குதல் மற்றும் இறப்பர் பண்டங்கள் உற்பத்தி தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல் ஆகிய அடிப்படை குறிக்கோள்களுடன் பேலியகொட இறப்பர் பொருட்கள் உற்பத்தி மற்றும் சேவை நிலையம் நிறுவப்பட்டிருந்த போதிலும் அதன் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது 8 செயற்பாடுகளில் 2 மேற்கொண்டிருக்காததுடன் 3 இன் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | இங்கு அனைத்துச் செயற்பாடுகளும் கைத்தொழிலாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்படுவதுடன், இறுதியில் மனிதவள பற்றாக்குறைகளும் அதனை பாதித்திருந்ததுடன் தற்போது நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையும் காரணமாக இருந்தது. | - மேற்படி - |